# சுடர்

நவ'84
45

இன்றேசிரித்துவிடு
நாளை உன் நிலையறியாய்
எத்தனையோ துயர்மேகம்
சுற்றியுனைச் சூழ்ந்துவிடும்.



மாத இதழ்
50 காசு

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,



# காந்தியின் கையில் பிராந்தி

உலகப் புகழ்பெற்ற காந்தி படத்தில் காந்தியாகவே நடித்து எல்லோர் மனத்திலும் நிறைந்த பிரிட்டிஷ் நடிகர் பென் கிங்ஸ்லி இப்போது இதற்கு நேர் எதிராக ஒரு குடிகாரரின் பாத்திரத்தில் நடித்து வருகிறார்.

அகிம்சையை உணர்த்தி தமது வாழ்க்கையில் எதை காந்தி எதிர்த்தாரோ அந்த குடியையே தமது வாழ்க்கையாகக் கொண்ட பிரசித்திப் பெற்ற 'எட்மண்ட் கியான்' என்ற ஒரு நடிகரின் பாத்திரத்தை அவர் ஏற்று நடிக்கிறார்.

பிராந்தி பாட்டிலும் கையுமாகவே வாழ்ந்து மடிந்த அந்த நடிகரின் பாத்திரத்தையும் பென்கிங்ஸ்லி மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். காந்தி படத்தில் நடித்ததற்காக ஆஸ்கார் பரிசை வென்ற கையோடு இப்படத்தில் நடிக்கத் தொடங்கினார் கிங்ஸ்லி.

FREE E-BOOKS , www.thamizham.net.,

**கூட்டு சந்தா** ரூ5/- தான்! 12 இதழ்கள் அஞ்சலில் பெற பணவிடை செய்யுங்கள். எல்லாத் தொடர்புகளுக்கும் **கூட்டு** 1494 **அண்ணாநகர்,** சென்னை-600 040.

---

**கூட்டு முன் இதழ்களைப் படிக்காதவர்கள்** இப்போதும் சிலவற்றைப் பெற முடியும் இதழ் எண்கள் : 1 முதல் 12, 14, 16, 17, 19, 21, 22, 26, தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். இதழுக்கு 35 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

---

**கூட்டு இன்னும் இம்மாதம் வந்து சேரவில்லை** என்று சில சந்தாதாரர்கள் மௌனமாக வருந்திக் கொண்டிராமல் எங்களுக்கு வராமை பற்றித் தெரிவியுங்கள். என்ன முயற்சி எடுத்தும் சில கூட்டு இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது இன்னும் நிற்கவில்லை. சந்தா முடிய காலமிருந்தும் 15ஆம் தேதிக்குள் கூட்டு கிடைக்கப்பெறா சந்தாதாரர்கள், சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர், முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

---

**கூட்டுயை இலவசமாக அனுப்புங்கள்!** கூட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

---

சென்ற இதழில் வெளியான 'இந்தியன்' என்ற கவிதை எஸ். தவமணி என்பவரின் பெயரில் வேறு ஒரு பத்திரிகையில் ஏற்கனவே வெளியானதாக புகார்கள் வந்தன

எஸ். தவமணியின் புனைப் பெயர் தான் வசீகரன் என்பதைத் தெரிவிக்கிறோம்.

கூட்டியின் ஒவ்வொரு வரியையும் விழிப்போடு கவனித்து வரும் வாசக நண்பர்களுக்கு நன்றி.

—ஆசிரியர் குழு

---

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி :—

**மைதிலி மோகன்,**
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஸ்கூட்டரில் போன டாக்டர் சாவு!

## "திருஷ்டி" பூசணிக்காயில் சறுக்கி விழுந்தார்!!

சென்னை, அக். 8— ஸ்கூட்டரில் போன ஒரு டாக்டர் ரோட்டில் கிடந்த திருஷ்டி பூசணிக்காயில் சறுக்கி விழுந்தார். இதனால் தலையில் பலத்த அடிபட்டு அவர் பரிதாபமாக இறந்தார்.

**டாக்டர்**

அந்த டாக்டர் பெயர் பி. ராமலிங்கம் (வயது 45) சென்னை சேத்துப்பட்டு மெரிங் அவென்யூவில் வீடு உள்ளது.

டாக்டர் பி. ராமலிங்கம் செங்கற்பட்டு அரசினர் மருத்துவமனையில் காது—மூக்கு—தொண்டை சிகிச்சை பிரிவில் பணியாற்றிவந்தார்.

**சறுக்கிவிழுந்தார்**

இவருக்கு திருவொற்றியூரில் கிளினிக் உள்ளது. கடந்த 4-ந் தேதி ஸ்கூட்டரில் "கிளினிக்" போனார். 3-ந் தேதி ஆயுத பூஜையை யொட்டி, "திருஷ்டி" சுற்றி உடைக்கப்பட்ட பூசணிக்காய் ஒன்று ரோட்டில் கிடந்தது.

அதில் டாக்டர் சென்ற ஸ்கூட்டர் சறுக்கியது. டாக்டர் ராமலிங்கம் தூக்கி வீசப்பட்டார். தலையில் பலத்த அடிப்பட்டது.

**சாவு**

உடனே அவரை பொது மருத்துவ மனையில்கொண்டு சேர்த்தனர். டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். ஆயினும் பயன் இல்லை. டாக்டர் ராமலிங்கம் பரிதாபமாக செத்தார்.

அவருக்கு குணவதி என்ற மனைவியும் ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.


—தினகரன்: 8.10.84

**இச்செய்தியைப் படித்த பின்பாவது...**

தீமைகளையும் திருஷ்டி பூசணிக்காயா? உயிர் குடிக்கும் யமனா? மூடநம்பிக்கைகள் மக்கள் உயிர்களை உறிஞ்சியது போதும்! இதுபோல பொதுவிடங்களில் மூடநம்பிக்கைகளைப் பிரகடனப் படுத்தி மக்களுக்கு ஊறு விளைவிப்போர்க்குக் கடும் தண்டனை விதிக்க அரசு ஆவன செய்தாக வேண்டும்!

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது எள் மருத்துவம்



**உடல் இளைக்க அல்லது பருக்க** காலை எழுந்தவுடன் சுமார் 20 கிராம் கருப்பு எள்ளை மென்று தின்று தண்ணீர் குடியுங்கள். 3 மணி நேரம் வேறெதும் உண்ண கூடாது. குச்சி உடம்பர்களுக்கு சதை போடும். தடியர் இளைப்பர்.

**படுக்கையில் சிறுநீர்** கழிக்கும் குழந்தைகளுக்கு இரவில் வெண்முள்ளங்கியுடன் எள் சேர்த்துக் கொடுத்தால் அப்பழக்கம் ஒழியும்.

**மூல நோய்** உடையவர்கள் 5 கிராம் எள் விழுதுடன் 5 கிராம் ஆட்டுப் பாலையும், 5 கிராம் சர்க்கரையும் கலக்கி குடித்து வந்தால் பயன் தெரியும்.

**இரத்த காயம்** ஏற்பட்டால், அவ்விடத்தில் நுரைத்த எள்ளுடன் தேனையும், நெய்யையும் கலந்து தடவுக, குணமாகும்.

**பல் பலவீனமுடையவர்கள்,** தினசரி காலை ஒரு கைப்பிடி எள் சாப்பிடுங்கள். பற்களின் வீழ்ச்சி தடுக்கப் பட்டு பற்கள் பலமாகும்.

**குஷ்டம் குணமாகவும்** எள் உதவும். எள், உப்பு, மிளகாய் வகைக்கு 5 கிராம் எடுத்து லேசாக வறுத்து, இடித்து, சலித்து, பாட்டிலில் போட்டு வைத்து தினசரி காலை, மாலை இரண்டு சிட்டிகை அளவு அரைத் தேக்கரண்டியளவு பசு நெய்யில் கலந்து 21 நாள் உண்டால் குணமாகும்.

**நீரிழிவு நோய்** உடையவர்கள் இப்படி செய்க: 5 கிராம் எள்ளை 3 மணி நேரம் நீரில் ஊற வைத்தால் கருநிற தோள் கழன்று வெண்ணிறமாகும். இதை நன்கு காய வைத்து, வாணலியில் வறுக்கவும். பின் பனை வெல்லத்தைப் பாகு செய்து அதில் போட்டு கிளறி எலுமிச் சைப்பழ அளவு உருண்டையாக்கி காலை ஒருண்டை வீதம் உண்டு வெந்நீர் பருகுக. 21 நாள் செய்க. நீரிழிவு குண மாகும். இனிப்பை இந்நேரம் தவிர்க்க. தினம் பாகற்காய் சேர்க்க.

[அடுத்து : நமது 'பால்' மருத்துவம்]

—சித்தன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

✳ ஏப்படி எப்படியோவெல்லாம் இருந்தவர்கள் இப்படி ஆகிவிட்டார்களே என்று வருத்தப்பட்டதுண்டா?



மரணப்படுக்கையில் சாவித்திரி

நடிகையர் திலகம் சாவித்திரியின் மரணப்படுக்கையில் எடுக்கப்பட்ட இப்புகைப் படத்தைப் பார்க்கும்போது இப்படித் தோன்றுகிறது. நோயும், சாவும் யாரையும் விட்டு வைக்காத பொதுமைவாதிகள்!

✳ ஆபாசமும் துடுக்கும் நிறைந்த ஒரு தர்ம சங்கட கேள்வியை பொது விடத்தில் ஒருவர் கேட்டு விட்டால்?

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக முத்தமிழ் விழாவில் எழுத்தாளர் உஷா சுப்ரமணியத்திடம் ஒரு மாணவர் கேட்டிருக்கிறார்:

"உங்களை நான் முத்தமிடத் துடிக்கிறேன். ஏற்றுக் கொள்வீர்களா?" அவர் அளித்த பதில் : "பாவம் விடுதி மாணவர் என நினைக்கிறேன். தனிமை வாட்டுகிறது போலும்! தாய்ப் பாசத்திற்காக ஏங்குகிறார், மகனே வா! உச்சி முகர்ந்து முத்தமிட நானும் துடிக்கிறேன்."

✳ அண்மையில் பொது இடத்தில் நீங்கள் கண்டு மகிழ்ச்சி அடைந்த அனுபவம்...?

FREE E- BOOKS , www.thamizham.net.,

எழும்பூர் ரயில் நிலைய டிக்கெட் கவுண்டர். 15 நிமிடங்களாக ஆளில்லை. எல்லோரும் மனதிற்குள் முணுமுணுத்தார்கள். ஓர் இருபது வயது இளைஞன் மட்டும் "கவுண்டரில் ஆள் எங்கே? கவுண்டரில் ஆள் எங்கே?" என்று உரத்த குரலில் விடாமல் கத்தத் தொடங்கினார். உடன் கவுண்டரில் விரைந்து வந்தமர்ந்தார் அலுவலர். கியூவில் நின்றிருந்தவர்களுக்கெல்லாம் இந்த அகிம்சை போராட்டம் வெற்றியடைந்ததில் மகிழ்ச்சி. இந்நிகழ்ச்சி மகிழ்ச்சியோடு புதிய நம்பிக்கையையும் அளிக்கது.

## எமக்கு வந்தவை

*கண்ணிலே நீர் எதற்கு?:* (2.50) நெல்லை செல்வம் — செல்லபாப்பா பதிப்பகம், 19, சன்னதி தெரு, அனகா புத்தூர், சென்னை-600 070.

*ஈழத்தமிழர் இறைமை:* (10.00) மு. திருச்செல்வம்.

*எனது யாழ்ப்பாணமே:* (10.00) சச்சிதானந்தன் காந்தளகம், 247, திருட்டிணவேணி வீதி, சென்னை-600 029.

*புரட்சிப் பொன் மொழிகள்:* (9.50) தொகுப்பாளர்: ப. மூர்த்தி Selvarasan Pathippagam, 83, Bhashyam Nagar, Sri Ramapuram, Bangalore-21.

*நடிகர் திலகம் சிவாஜி கணேசன்:* (15.00) குடும்பத் தலைவர், நடிகர், அரசியல வாதி (வாழ்க்கை வரலாறு)— பேராசிரியர் க. வேணுசாமி, நூல் கிடைக்குமிடம்: 'அருளகம்', 298, அக்ரகாரம் பள்ளிப்பாளையம், ஈரோடு-9.

---

### வரி விளம்பரம்

நவயுகாவின் 11-வது நாடகப் பட்டறை டிசம்பரில் 5 நாட்கள் இடம், உணவுக்கு ரூ. 100/- மட்டுமே. நவம்பர் 20-க்குள்தொடர்பு கொள்க: நவயுகா, 37, கெனால் ரோடு, சென்னை-10. (குறைந்த இடங்களே உள்ளதால் முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை)

---

எழுதப் படிக்கத் தெரிந்த, வசதி படைத்த, தொண்டு உள்ளம் கொண்டவர்கள் ஆண்/பெண் யாவரும் எம்முடன் தங்கி சேவை செய்ய ஆள் தேவை. ரிப்ளையுடன் எழுதவும். இயக்குநர், ஜூனியர் இந்தியா, து. அம்மன் கோயில் தெரு, பள்ளிகரணை அஞ்சல், சென்னை-601 302.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# துர்வாசர் வண்ணநிலவனுடன்

● **துர்வாசர் தொடர் முடிந்து பல மாதங்கள் ஆகிவிட்ட பின்பும் இன்று கூட அது குறித்து குமுதம் அரசு போன்றவர்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்களே?**

கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் இது ஒரு "விற்பனை யுக்தி" என்பது நன்கு புலப்படும். சுட்டியில் வெளிவந்த "குமுதம்" விமர்சனத்தைக் கூட வரி பிறழாமல் அப்படியே மறு பிரசுரம் செய்து கொண்டது குமுதம். துர்வாசர் என்கிற ஐந்து எழுத்தைப் பல பத்திரிகைகள் குறிப்பிட்ட காலத்திற்குச் சிறந்த விற்பனைப் பொருளாகப் பயன்படுத்தி கொண்டது என்பது உண்மை.

● **சோ, துக்ளக்கில் உங்களை எல்லாம் ஒரு கொத்தடிமை போல நடத்துகிறாராமே?**

எந்த மடப்பயல் அப்படிச் சொன்னான்? துக்ளக்கில் பணியாற்றுபவர்கள் அனைவரும் ஒரு மகிழ்ச்சி கரமான குடும்பம் போல! வேலைச் சுமை எல்லோருக்கும் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. திருப்தி கரமான வருவாய். எல்லோருக்கும் பொறுப்புக்களும், கருத்தை வெளியிடும் சுதந்திரமும் தாராளமாகவே உண்டு. இதில் "கொத்தடிமை" எங்கிருந்து வந்தது?

● **இறுதியாய், உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?**

என்னைப் பற்றிச் சொல்ல பிரமாதமாய் என்ன இருக்கிறது? கடந்த ஏழு வருடங்களாக துக்ளக்கில் பணியாற்றி வருகிறேன். நான்கு நாவல்கள், நான்கு சிறுகதைத் தொகுதி ஒரு கவிதை தொகுதி ஆகியவைகள் நான் பிரசவித்தவை. கடல் புரத்தில்... என்கிற எனது நாவலுக்கு இலக்கிய சிந்தனை பரிசு கிடைத்தது. ருத்திரையாவின் "அவள் அப்படித்தான்" திரைப்படத்திற்கு கதை-வசனம் எழுதினேன். சாதனைகள் எதையும் இதுவரை நான் நிகழ்த்தவில்லை என்றே எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

சந்திப்பு : [illegible]. இரகுராமன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தூக்கு மேடையில் தோழர் பகத்சிங் 3

எமர்சனிடமிருந்து கடிதம் வந்த அன்றே, அவசரம் அவசரமாக காந்தி, இப்படிப் பதில் எழுதினார்:—

1, தரியா கஞ்ச்,
டில்லி,
மார்ச் 20, 1931.

என் அன்புள்ள எமர்சன்,

சற்று நேரத்திற்கு முன்பு பெறப்பட்ட, தங்கள் கடிதத்திற்கு நன்றி! தாங்கள் குறிப்பிட்டுள்ள அந்தக் கூட்டத்தை நான் அறிவேன். என்னால் இயன்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளேன்; தகாத செயல்கள் எதுவும் நிகழாது என்று நம்புகின்றேன். கூட்டத்தில், எவ்விதக் குறுக்கீடும், போலீஸ் படையின் அணி வகுப்பும் கூடாது என்று நான் யோசனை சொல்கிறேன்; கூட்டத்தில் சலசலப்பு ஏற்படக் கூடும். கூட்டங்கள் முதலியவற்றின் வாயிலாக, மக்களின் உணர்ச்சிகள் வெளியேற அனுமதிப்பது நல்லதாக அமையும்.

தங்களின் நேர்மையுள்ள,
(ஒம்) எம். கே. காந்தி

காந்தியின், மிகச் சிறிய - ஆனால் மிக ஆபத்தான, இந்தக் கடிதத்தை, "காந்தியின் படைப்புக்களின் தொகுப்பு" (The Collected works of Gandhi) 35 மடலத்தில் (Vol. 35) வெளியிட்டுள்ளனர். ஆனால், சென்ற மாத 'சுட்டி'யில் வெளியாகியிருந்த, எமர்சனின் கடிதம் வெளியிடாமல் மறைக்கப் பட்டுள்ளது. (அதே 35 மடலத்தில், எமர்சன் எழுதியுள்ள மற்ற சாதாரணக் கடிதங்கள் யாவும் உள்ளன). எமர்சனின் கடிதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல், இந்தக் கடிதத்தை மட்டும் படிப்பவர்களுக்கு, எந்த உண்மையும் விளங்காது. இந்தக் கடிதம், பகத்சிங்கின் தூக்குத் தண்டனை தொடர்பாக எழுதப்பட்டதென்பதையும், சுபாஷ் சந்திர போஸின் செயலுக்கு எதிர் நடவடிக்கையாக எழுதப்பட்டதென்பதையும் எமர்சன் கடிதம் மூலமே நாம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

அறிய முடியும். எந்தப் பெயரையும் குறிப்பிடாமல், ரொம்பவும் ஜாக்கிரதையாக - சுருக்கமாக எழுதியுள்ள காந்தியின் 'புத்தசாலித்தனம்' நமக்குப் புரிகிறது.

வாசகர்களே! கடிதத்தை மீண்டும் படியுங்கள். போலீஸ் படையைக் கூட்டத்தில் நிறுத்தலாமா, கூடாதா என்பதற்கெல்லாம் கூட, காந்தி, ஆங்கில அரசாங்கத்திற்கு யோசனை கூறுகிறார். (காந்தியின் யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டு, சுபாஷ் போஸ் கூட்டத்திற்கு, சி.ஐ.டிகள் மட்டுமே அனுப்பப்படுகிறனர்.)

இந்தக் கடிதத்தின் கடைசி வரிகளில், நம்பிக்கைத் துரோகம் நாகரிகமாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. பகத்சிங்கிற்கு ஆதரவாக, நாடு முழுவதும் குமுறிக் கொண்டு இருந்த மக்களின் உணர்ச்சிகள் வெளியேற என்ன வழி என்பதைக் காந்தியாரா, அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொடுப்பது?

இவை மட்டுமல்ல-எந்தத் தேதியில் பகத்சிங் முதலானோரைத் தூக்கிலிடலாம் என்பதைக் கூட, காந்தியிடம் கலந்து கொண்டு தானே அரசாங்கம் அடுத்தடுத்த நடவடிக்கையில் இறங்கியது.

—சுப.வீரபாண்டியன்

(அடுத்தப் படலம் அடுத்த இதழ் முதல்)

**வானொலி தொலைக் காட்சி**
**நிலையங்களிலுமா இடைத்தரகர்கள்!**

சென்னை-வானொலி-தொலைக் காட்சியில் பங்கு பெறும் வெளிக் கலைஞர்களிடம், அங்குப் பணியாற்றும் குறிப்பிட்ட சிலர் நிகழ்ச்சி பதிவானவுடன் "மாமூல்" வாங்குகிறார்களாம். "லஞ்சம்" என்று வெளிப் படையாக கேட்காமல் "ஒரு 20 ரூபாய் கடனாகக் கொடுங்கள்" என்று நாசுக்காக கேட்கிறார்களாம். கலைஞர்களும் தங்களின் நிகழ்ச்சி ஒலி(ளி) பரப்பாகப் போகிறதே என்கிற சந்தோஷத்தில் தண்டக்கடனே என்று அழுது தொலைத்து விட்டு வருகிறார்களாம். ஒரு முதுபெரும் எழுத்தாளர் தனக்கே இந்த "கதி" ஏற்பட்டதாகச் சொல்லி நம்மிடம் வருந்தினார்.

—ரு

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வாசகர் எதிரொலி:
# உங்கள் புகை நிறுத்த வழி - சரியில்லை



அன்புள்ள சுட்டியாரே!

தங்களின் 44ஆம் சுட்டியில் "புகை பிடிக்காமல் இருக்க இதோ ஒரு புதிய வழி" பகுதியில் பைகார்பனேட் மாத்திரைகளை (சமையல் சோடா) சாப்பிட்டால் புகை வேட்கை தணியும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் சில வயிற்றுவலிக் காரர்கள் சமையல் சோடாவை சாப்பிட்டால் வலி தணியும் என்று நினைத்து சாப்பிட்டு அதே பழக்கமாகி விட்டது. அதை சாப்பிடாவிட்டால் வயிறு வலிக்க ஆரம்பித்தது. அப்பழக்கத்தின் பின் விளைவு, ஒரு வேலையும் செய்ய முடியாத நடை பிணங்களாக சிலர் இருக்கிறார்கள். சிலர் இறந்தார்கள். இது என் கண்கூடாகப்பார்த்த பார்க்கும் உண்மை. மேலும் சமையல் சோடா மாத்திரைகளாக கிடைப்பதில்லை. தினமும் 4 கிராம் மாவுதான் சாப்பிட வேண்டும். "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்த கதை"யாக இருக்கக் கூடாது. இங்கே நானும் ஒரு பெரும் புகைஞன் என்பது குறிப்பிடத்தக்கது. வேறு ஒரு நல்ல புதிய வழியை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,

—ஜி. தங்கவேலு, போர்லே, மராட்டியம்

### மராட்டிய வாசகர் ஐயத்திற்கு ஓர் விளக்கம்

அண்மையில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்த முடிவைத்தான் புகை குடிப்போர் நலன் கருதி, சென்ற சுட்டி இதழில் வெளியிட்டிருந்தோம். அன்பர் தங்கவேலு கூறுவது போல வயிற்றுவலிக் காரர்கள் சோடா சாப்பிடுவது சரியே. எந்த மருந்தும் சார்நிலையை(Dependability) ஏற்படுத்துவது உண்மையே. வயிற்றுவலிக் காரர்கள் நடைபிணமாய் அலைவது சோடா சாப்பிடுவதால் அல்ல; அவர்கள் வயிற்றில் அல்சர் மிக அதிகமாகப் படர்ந்து விட்டதால் தான்.

வயிற்றில் சேரும் அதிகப்படி அமிலத்தாலும், புகை குடிப்பதாலும், கவலை மிகுவதாலும் அல்சர் தோன்றுகிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

அவர்களுக்கு சோடா தற்காலிக நிவாரணத்தையே அளிக்கும்.

ஆனால் இங்கே புகை குடிப்பவர்கள் நிலை அப்படி இல்லை. இரத்தத்தில் கலந்து விட்ட நிகோடினின் வேகத்தைச் சற்று கட்டுப்படுத்தும்; அவ்வளவே.

புகையை முற்றும் விட்டொழிக்க எந்த மருந்தும் கிடையாது. மனோபலம் ஒன்றே மாமருந்து. அது இருந்தால் முடியாதது என்ன இருக்கிறது?

—சுட்டி பாரதி

# அவை இந்திய நண்டுகள்

கேரளாவிலிருந்து மேல் நாட்டுக்கு நண்டுகளை ஏற்றுமதி செய்யும் ஒரு வியாபாரி செலவு குறையும் பொருட்டு மூடி இல்லாத திறந்த பெட்டிகளில் அவற்றை அனுப்பினார். ஒன்று கூடச் சேதமில்லாமல் அப்படியே போய் சேர்ந்திருக்கின்றன.

மேல் நாட்டில் அப்பெட்டிகளைப் பெற்றுக் கொண்ட அந்நாட்டு வியாபாரி மிகவும் ஆச்சரியமடைந்தார். ஒரு நண்டு கூடப் பெட்டிமேல் ஏறி வெளியே போய் விடவில்லை. இது எப்படி என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேரளக்காரருக்கு வெள்ளைக்காரர் ஆச்சரியத்தோடு எழுதிக் கேட்டார். அவர் இப்படி சுருக்கமாகப் பதில் கொடுத்தார்:

**"ஐயா! அவையெல்லாம் இந்திய நண்டுகள். ஒரு வேளை ஒரு நண்டு மெதுவாகத் தொத்திக் கொண்டு ஏறினால் மற்றவை கீழே பிடித்து இழுத்து விடும்."**


(செய்தி ஆதாரம்: ரீடர்ஸ்டைஜஸ்டு அக் 83 பக்: 132)

**சுட்டி அலுவலகத்திற்கு அலுவலர் தேவை**

20-11-84க்குள் வயது, கல்வி, பிற அனுபவங்கள் தற்போதைய நிலை போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். சுட்டி வாசகர்களுக்கு, விற்பனையாளர்களுக்கு முன்னுரிமை உண்டு. மேலாளர், சுட்டி, 1494 அண்ணாநகர் சென்னை-600 040.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# தண்டபாணியின் 'தைமஸ்' பேசுகிறேன்




தைராய்டு, சிறுநீரகம், பித்தப்பை போல, நான் பெரும் புகழ் ஈட்டவில்லை என்பது உண்மைதான். ஆனால் இன்றைய புற்றுநோய் போன்ற பயங்கர நோய்களுக்குத் திறவு கோலும் தீர்வும் என்னிடம்தான் இருக்கிறது என்பது இன்னும் பலருக்குத் தெரியாது. உடலில் நிகழும் கிருமி எதிர்ப்புப் போருக்கு (IMMUNITY) சக்தி அளிப்பது நான்தான் என்பது மருத்துவர்களுக்கு மட்டுமே தெரியும். நான் உடலின் எதிர்ப்பியக்கத்தின் பாசறையாக விளங்குகிறேன் என்பது தண்டபாணிக்குத் தெரியாது. நான் தண்டபாணியின் நுரையீரல்களுக்கு நடுவில் மார்பு எலும்புகளுக்கு மேலே இருக்கிறேன். மற்ற சுரப்பிகளைப் போல் அலையாமல் என் பருமனும், அளவும் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன தண்டபாணி தன் தாயின் கருவில் இருக்கும் போது அவன் இருதயத்தை விடப் பெரிய தாக இருந்தேன். இப்போது தண்டபாணிக்கு வயது 40. இப்போது ஒரு முற்றிய முந்திரிப் பருப்பளவு இருக்கிறேன்.

எனது கிருமிப் போர்க்களச் செய்திகள் சுவையானவை தண்டபாணி குழந்தையாக இருந்த போது எனக்கு வேலை அதிகம். அவனது எலும்புகளின் உள்ளே கொழுநீர் (BONE MARROW) நிறைந்துள்ளது. அதில் கோடி கோடியாக நுண்ணிய போரணுக்கள் (LYMPHOCYTES) மிதக்கின்றன. அவை ரத்த நாளங்களின் வழியாக என்னுள்ளே பாயும் போது அவற்றை வளர்த்து ஆளாக்கிப் பல்வேறு போர் முனைகளுக்கு அனுப்பி வைக்கிறேன்.

ஒரு சாதாரண ஜலதோஷத்திலிருந்து புற்றுநோய் வரை அனைத்துக் கிருமிகளையும் கண்ட மாத்திரத்தில் இந்தப் போரணுக்கள் எதிர்த்துப் பாய்ந்து கொரில்லாப் போர் செய்து தண்டபாணியைக் காக்கின்றன.

FREE E-BOOKS , www.thamizham.net

சில சமயத்தில் இந்தப் போரனுக்கள் ஒரு சிறிய அந்நியக் கிருமியை எதிர்த்துத் தேவையற்ற பெரும்போரை விளைத்து ரொம்ப கலாட்டா செய்வதும் உண்டு. இதை ஒவ்வாமை (ALLERGY) என்கிறார்கள்.

வேறு சமயங்களில் என் போரனுக்கள் பகைக் கிருமிகளைத் தாக்குவதற்கு பதிலாக, தண்டபாணியின் கைகால் மூட்டுகளின் நடுவில் இருக்கும் போர்வைத் தசைகளைத் தாக்கித் தின்றுவிடும். அதன் விளைவு மூட்டு வீக்கம், முடக்கு வாதம் (RHEMATIC SWELLING).

அண்மையில் தான் விஞ்ஞானிகள் என்னை முழுதும் ஆராய்ந்து, நான் தைமோஸின் என்னும் உயிர் நீரைச் சுரப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்னை நல்ல நிலையில் வைக்க, தண்டபாணி சர்வாங்காசனம் செய்ய வேண்டும். எனக்கு, சப்தம், ஆரவாரம், பயம், சோர்வு, நோய் போன்றவற்றால் ஏற்படும் நெருக்கடி நிலை (STRESS) கொஞ்சம் கூடப் பிடிக்காது. என்னை தண்டபாணி என்ன? விஞ்ஞானிகளே முழுதும் அறியாமல் இருக்கிறார்கள் என்பதை நினைக்க வருத்தமாக இருக்கிறது.

அடுத்து : ஹரிஹரனின் ஹைபோதாலமஸ்

—கட்டி பாரதி

# தற்கொலை நகரம் பெங்களூர்

இந்தியாவிலேயே தறகொலை அதிகமாக நடக்கும் நகரங்கள் பற்றி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் கர்நாடக மாநிலத்தின் தலைநகர் 'பெங்களூர்' முதலிடம் வகிக்கிறது.

கடந்த 6 மாதத்தில் மட்டும் இங்கு 664 பேர் தற்கொலை செய்து உள்ளனர். 2வது இடம் சென்னைக்கு கிடைத்துள்ளது. இங்கு கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து ஜூன் மாதம் வரை 278 பேர் தற்கொலை செய்து இருக்கிறார்கள். ஆனால் 1981ம் ஆண்டு 696 பேர் தங்கள் வாழ்வை முடித்துள்ளனர். 3வது இடம் ஐதராபாத்துக்கு கிடைத்து உள்ளது. கல்கத்தாவில் தான் மிகக்குறைந்த அளவுக்கு தற்கொலைகள் நடக்கின்றன. 1982ம் ஆண்டில் அங்கு 41 பேர் தற்கொலை செய்து இருக்கிறார்கள். கடந்த ஆண்டில் 57 பேர் பலியாகி உள்ளனர்


—எம். பி. இளங்கோ

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வட்டெழுத்து

சங்க காலத்தில் வழங்கி வந்த தாமிளி எழுத்து தமிழகத்தில் கிபி 6ஆம் நூற்றாண்டு பல்லவ ஆட்சி தொடங்கும் வரை வழக்கில் இருந்து வந்தது. முற்காலப் பல்லவர்கள் வடமொழித் தொடர்பு உள்ளவராதலால் தமிழையும் வடமொழியையும் எழுதுவதற்கேற்ப சிறந்த எழுத்துக்களை உருவாக்கினர். அவ்வெழுத்துக்கள் படிப்பதற்குச் சற்றுக் கடினமானவை. இந்தப் பல்லவர் காலத்தில் தென் பாண்டி நாட்டகத்தே ஓர் எழுத்து உருவாயிற்று. அதுவே வட்டெழுத்து. இந்த எழுத்துக்கள் கிபி 9ஆம் நூற்றாண்டின் பிற்காலச் சோழர் எழுத்து வரையிலும் வழக்கில் இருந்து வந்தன. சித்தன்னவாசல் குகையிலும், ஏராளமான நடுகற்களிலும் இவ்வட்டெழுத்துக்களே காணப்படுகின்றன. கம்பரும் சேக்கிழார் தம் காப்பியங்களை இவ்வட்டெழுத்துக்களிலேயே எழுதியிருக்க வேண்டும்.

நம் தமிழகத்தே இன்னும் ஆங்காங்கே கண்டுபிடிக்கப்படாத கல்வெட்டுக்கள் ஏராளம் இருக்கின்றன. இவ்வட்டெழுத்தின் வடிவை அறிந்து வைத்தால் கண்ணில் பட்ட கல்வெட்டைக் கொண்டு அதன் காலத்தையும், அதன் வாயிலாக அக்காலப் பெரியோர்களின் பண்பாட்டையும் அறியலாம் என்ற நோக்கில் கீழே எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.




அடுத்து : பிற்காலச் சோழர் எழுத்து

—கட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

## சிறுகதை: மாயப் போராட்டம்



அந்த அழுகிய மாமிசத் துண்டுக்காக அந்த நாய்கள் ஒன்றை ஒன்று மோதிக் கொண்டிருந்தன. ஒரு பல்லுப் போன கிழட்டு நாய் மட்டும் போராடித தோற்ற பாவனையில் சற்று ஒதுங்கி நின்றபடியே குரைத்துக் கொண்டிருந்தது.

பக்கத்துப் புதரில் நாய்களின் ஒலியால் அஞ்சிய மான் குட்டி ஒன்று, நடுங்கி, ஒடுங்கி, பதுங்கி நின்றது. நாய்கள் ஒன்றை ஒன்று மிகமோசமாகக் கடித்துக் குதறிக் கொண்ட காட்சியைக் கூர்மையாகக் கவனித்த மான் குட்டிக்கு, ஒரு புதிய தெம்பு மனத்தில் விளைந்தது.

அவைகள் போராடுகின்றன, நமக்கு ஆபத்தில்லை என்ற நினைப்பில், சற்று புதரை விட்டு வெளியே வந்து, சண்டையைக் கவனிக்க ஆரம்பித்த மான் குட்டியை, எதார்த்தமாக போராடிய நாய்களுள் ஒன்று கவனித்து விட்டது. உடனே அந்த நாய் துரத்த, அனைத்து நாய்களும் உடன் சேர்ந்து துரத்தின. உயிருக்குப் பயந்து ஓடிய மான்குட்டியை, நாய்கள் வேட்டையாடி வீழ்த்தின.

தாறுமாறாய்க் கடித்துக் குதறின. அந்தப் பல்லுப்போன கிழட்டு நாயும் தனது கால் ஒன்றை கடித்துக் குதறுவதை கண்ணுற்றபடியே மான்குட்டி கீழே சாய்ந்தது. "தன்னை பங்கிட்டு உண்பதிலும் இந்த நாய்கள் போராடுமோ?" இந்த நினைவை முடிக்கு முன்னே மான் குட்டி உயிரை விட்டது.

—புஷ்பா அர்ஜுன்


வேலையற்ற இளைஞர்களுக்கு ஓர் ஆறுதலான செய்தி

தமிழகத்தின் சில மாவட்டங்களில் சொந்தமாகத் தொழில் தொடங்க அரசு உதவித்தொகை அளிக்க முன் வந்துள்ளது. இந்த உதவித்தொகை சில தொழில்களுக்கு மட்டுமே. ரூபாய் 88 கோடி அளிக்கப்பட்டுள்ள தொகையில் மூன்றில் ஒரு தொகை அச்சகம் ஆரம்பிக்க இதுவரை தரப்பட்டுள்ளது. புது அச்சகம் தொடங்குவதற்கான அனைத்து உபகரணங்களும், ஆலோசனைகளும் பெற நம்பிக்கையான இடம்: ரங்கா டைப் பௌண்டரி, 73, ஹெண்டர்ஸ் சாலை, வேப்பேரி சென்னை-600 112 பேசி: 37999, 664293.

விளம்பரம்


FREE E- BOOKS , www.thamizham.net.,

இவ்விதழ் சிறப்புக் கட்டுரை



# பேய் பிடிப்பது ஏன்?

'பேய் பிடித்தவர்' என்று கூறப்படுபவரிடம் காணப்படும் அதிசயமான செயல்கள் அறிவு வளர்ச்சி அடையாத காலத்தில் பெரும் திகிலை உண்டு பண்ணி அதற்குக் காரணம் பேயின் உட்பிரவேசமே என்று முடிவு கட்டிவிடு வதற்கு நியாயம் இருந்திருக்கலாம். ஆனால் மனோதத்துவ இயல், நரம்பியல் போன்ற மருத்துவப் பிரிவுகள் பெருமளவு வளர்ந்து விட்ட இன்றைய காலக் கட்டத்திலும் இதே நம்பிக்கை அழியாமல் இருந்து வருவது நமது சமுதாய அமைப்பின் பிற்போக்கையே காட்டுகிறது.

**நோய்க்குக் காரணம்:** பேய் பிடிப்பவர் ஆவேசம் கொள்கிறார் மயக்க மாகிறார். புரியாத மொழியில் பிதற்றுகிறார். கண் முன்னே எதையோ, காண்பது போல உணர்ச்சியடைந்து பேசுகிறார். கிட்டத்தட்ட இவை அனைத் திற்குமே மருந்துவ ரீதியாக விளக்கம் கொடுக்க முடியும். அளவுக்கு மீறி நரம்பு முறுக்கேறிய நிலை, அளவு கடந்த பயம், தவறான நம்பிக்கைகளில் உள் மனம் மூழ்கிப் போதல் இவற்றின் விளைவாக நோயாளியின் உள் மனம் தாக்கப்பட்டு அதன் வெளிப்பாடாக இத்தகைய விளைவுகள் ஏற்படுகின்றன.

**கோவூரின் சாதனை:** பகுத்தறிவு மேதை டாக்டர். கோவூர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்பாக, பொது மக்களிலேயே சிலரைச் தேர்ந்தெடுத்து செயற்கையாக இவர்கள் உள் மனத்தில் இத்தகைய கட்டளை களைப் பிறப்பித்து அவர்கள், அவர்களுக்கே தெரியாமல் பேய் பிடித்தவர் களைப் போல செயல் படுவதை மேடையிலே பலமுறை நிகழ்த்திக் காட்டி யிருக்கிறார்.

**இயற்கைக்கு அப்பால்:** எனவே மற்ற மூட நம்பிக்கைகளைப் போல, அறிவியல் ஒளியில் இதுவும் மூழ்கிப் போகும் நாட்கள் தூரத்தில் இல்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருட்கள் பல இருப்பதாக மனிதன் மயங்கி வருவதே இனம் தெரியாத பல பயங்களுக்குக் காலந்தோறும் காரணமாகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் நம் முன்னோர்களால பூஜிக்கவும், துவேஷிக்கவும் பட்ட பல பொருட்களை இன்று மனிதன் அறிவு சாட்டையால் அடித்து உண்மையைத் தெளிவித்திருக்கிறான். இருப்பினும் இன்னும் இயற் கைக்கு அப்பாற்பட்ட பொருட்கள் என்று சில பிற்போக்கான நம்பிக்கையாளர் களிடம் அழுத்தமாகவே இருந்து வருகின்றன. அவற்றை அறிவியல் விளக்கம் கொடுத்து இன்னும் விஞ்ஞானிகள் தெளிய வைக்காமல் இருக்கலாம். விளக்கம் இதுவரை கொடுக்க முடியாமல் இருப்பதால், என்றும் கொடுக்கவே முடியாது என்று முடிவு கட்டுவது வரலாற்றுப் பிழையாகும். சுருக்கமாகச் சொலவதானால் இயற்கையில் i) மனிதனின் அறிவுக்கு இதுவரை எட்டிய பொருள்கள் ii) இன்னும் எட்ட வேண்டிய பொருள்கள் என்ற பாகு பாடே இருக்க முடியுமேயன்றி இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருட்கள் என்று எதுவும் இயற்கையில் இல்லை.

**மூளையின் ஆற்றல்:** இந்த முறையில் மனிதனது மூளை பற்றி அறிவு லகத்திற்கு தெரிந்த விஷயங்கள், தெரியாத விஷயங்களை விட மிகக்குறைவே. நாம் எண்ணிப் பார்க்க முடியாத பல அதிசயமான ஆற்றல்கள் மூளைக்கு இருப்ப தாக தெரிய வந்திருக்கின்றன. தூரத்தில் இருக்கக் கூடிய பொருட்களை அறிதல், நோய்களை மனதினாலேயே குணப்படுத்தல், மனத்தாலேயே செய்தி களை அனுப்பல் இவையெல்லாம் அறிவுப் பூர்வமாக சாத்தியங்களே என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இதுபோன்ற அறியவும் அறிவிக்கவும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

வேண்டிய புதுமைகள் நிறைய இருப்பதால் "பேய் பிடித்தல்" என்பது பற்றி முழு விளக்கம் தரப்பட முடியாமல் இருந்தாலும் தவறில்லை.

**பெண் பேயாவது ஏன்:** பேய் பிடிப்பதற்கான அறிவியல் காரணங்கள் முழுவதும் விளக்க முடியா விட்டாலும், இது பிடிப்பதற்கான சமுதாயக் காரணங்களை நாம் அறிய முடிகிறது; நம் நாட்டில் பெரும்பாலும் பெண்களுக்கு அதுவும் படிக்காத, கிராமப் பெண்களுக்கே இந்நோய் பிடிக்கிறது. பெண்களைத் தாழ்த்தி, உளம் குன்றச் செய்து, உரம் குறையச் செய்து, அச்சத்தின் இருப்பிடமாய் அவர்கள் உள்ளம் மாற்றப்பட்டிருக்கிறது. கணவனாலும், மகனாலும், புகுந்த வீட்டாலும் சமைத்துப்போடும் எந்திரமாகவும், சொரணையற்ற சுமைதாங்கியாகவுமே இன்று பெண் இனம் பலராலும் நினைக்கப்படுகிறது. அவர்களுக்கு உணர்ச்சியும், அதனை வெளிப்படுத்த வேண்டிய தீராதாகமும் ஏற்படும்போது, அது பல சமயங்களில் கை கூட முடியததாகி விடுகிறது. வெறுப்படைகிறாள் பெண். கூடவே பல்வேறு சமுதாய அச்சங்கள் அவளைப் பலவீனமாக்கிய நிலையில், இந்த சுமைதாங்கி இடைவிடாமல் இரக்கமில்லாமல் சுமத்தும் பாரங்களைத் தாங்க வேண்டியிருக்கிறது. இதன் விளைவாக, மனதின் அழுத்தம் நரம்புகளை முறுக்கேற்றி, உள் மனதைக் கொதிப்படையச் செய்து நெஞ்சின் அத்தனை வேதனைகளும் ஒன்று திரண்டு அவள் பேயாகிறாள். இந்தப் பெண் பேய்களை உருவாக்குவது நாற்றமடிக்கும் இந்த சமுதாய அமைப்பே. எனவே தவறான சமுதாய சாக்கடைகள் சுத்தமாக்கப்பட்டு அதனால் பெண்ணினம் சுமைதாங்கி நிலையிலிருந்து சுதந்திர மனித இனமாக விடுதலை பெறும் வரை இந்த 'பெண் பேய்கள்' உருவாவது தொடரும்.

—எழில்

# குடியிருப்பு வாடகை மோசடிகள்

சென்னை, மதுரை கோவை, திருச்சி மற்றும் பல தொழில் வளர்ச்சி பெற்ற பெரு நகரங்களில் குடியிருப்பு பிரச்சனை மிக முக்கிய இடம் வகிக்கிறது.

குறிப்பாக சென்னை நகரில் ஆயிரககணக்கான கட்டிடங்கள் (Mansion) இதற்காக கட்டி விடப்பட்டு, குடியிருப்போரிடம் இருந்து பணம் கொள்ளை கொள்ளையாக பெறப்படுகிறது. இதற்கு மிகப்புகழ் பெற்ற திருவல்லிக்கேணி முதலாய் தி. நகர் தொடர பல இடங்களில் மிக லாபகரமான தொழிலாய் புதுபுது கட்டிடங்கள் முளைத்து விடுகின்றன! தி. நகரில் ராஜகுமாரி தியேட்டர் அருகே திறக்கப்பட்டுள்ள ஒரு மேன்சனில் மனிதனை மனிதனாக மதிக்காமல் நாய் கொட்டடி போன்ற சிறிய அறைக்குள் மரப்பலகைகளை ஷெல்ப் போல் வைத்து கொள்ளை லாபம் பெறுகின்றனர்.

ரூம் இருக்குமிடம் பற்றி தகவல் சொல்லும் புரோக்கருக்கு ரூம் வாடகையின் பாதியை இனாமாகக் கொடுக்க வேண்டும். அன்றி நண்பர் மூலம் அந்த இடத்திற்குச்

FREE E- BOOKS , www.thamizham.net.,

சென்றாலும் அந்த கட்டிட பியூனுக்கு (வாட்ச் மேனுக்கு) அதே தொகையைக் கொடுத்தாக வேண்டும். இது வன்றி ஆயிரக்கணக்கில் அட்வான்ஸ் கொடுக்க தயாராக இருந்தால் மட்டுமே இடமும் கிடைக்கும். எல்லாவற்றையும் சமாளித்தாலும் குடியிருப்பில் உள்ள குறையையும் கட்டிட சொந்தக்காரரிடம் கூறி நிவாரணம் கோரக் கூடாது. முடியாத பட்சத்தில் எந்த நேரமும் அக்குடியிருப்பை விட்டு வெளியேறும்படி கோரப்படக் கூடிய சூழ்நிலை உருவாகிறது.

''தமிழக கட்டிடங்கள் குத்தகை மற்றும் வாடகை கட்டுபாடு விதிகள் 1974''ன் படி ஒவ்வொரு பகுதிக்கும் அரசினால் நியமிக்கப்பட்ட வாடகை கட்டுப்பாட்டு அதிகாரி (Rent Control Officer) இருக்கிறார். கட்டிட சொந்தக்காரர், குடியிருப்பவர் இருவரும் ''ாதிக்கப்படாத வகையில் நியாய வாடகையை நிர்ணயிக்க இவரால் முடியும். நியாய வாடகை கோரி குடியிருப்பவர் இவருக்கு விண்ணப்பிக்கையில் இதைச் செய்து தர வேண்டியது இவ்வதிகாரியின் வேலை. அப்படி நிர்ணயிக்கப்படும் வாடகை 5 ஆண்டு காலத்திற்கு மாற்றப்படக் கூடாது என்பது விதி. ஆனால் நடைமுறையில் 2 மாதத்திற்கு ஒரு முறை வீடு மற்றும் ரூம் வாடகை உயர்த்தப்படுவதை நாம் காண முடிகிறது.

அதே போல, ஒரு மாத கால நியாய வாடகையை விட கூடுதலாக எந்த ஒரு தொகையையும் கோரி பெறுவதற்கு (To demand) சட்டத்தில் இடம் இல்லை. ஆனால் நடைமுறையில் உள்ள 'அட்வான்ஸ் அவலம்' நாம் அறியாதது அல்ல!

500 பேர் இருக்கும் ஒரு கட்டிடத்தில் (Mansion) ஒரே ஒரு தனி நபர் இந்த அநீதியை எதிர்த்து குரல் கொடுத்து, வாங்கும் வாடகைக்கு ரசீது கேட்டு போராடினால் அந்த கட்டிடத்து வாட்சுமேன் மட்டுமே அந்த தனி நபரை அடி உதை என்று மிரட்டி வெளியேற்றி விட முடியும் என்பது அனுபவத்தால் அறிந்தது.

அனைவருக்கும் விழிப்புணர்ச்சியும் தார்மீகக் கோபமும் வந்தால் ஒழிய சட்டங்களால் எந்த பயனும் இல்லை.

—அக்னிகுஞ்சு

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஒரு மானின் விலை 5 லட்சம் கடத்தப்படுகிறது



நாற்றமடிக்கும் உடல் பொதுவிடத்தில் மற்றவர் அருவருப்புக்கு ஆளாகாமல் இருக்கவும் வெளிப்பகட்டுக்காகவும் மஸ்க் எனப்படும் நறுமணப் பொருளை உலகெங்கும் பயன்படுத்துபவர் ஒரு அப்பாவி வாயில்லா ஜீவனைக் குரூரமாகக் கொன்று தயாரிக்கப்படுகிறது என்பதை அறிய நியாயமில்லை. பணப்பேராசை பிடித்த காட்டுமிராண்டிகளால் இமாலயப் பகுதி முழுதும் பெரும்பான்மையாக சுதந்திரத்துடன் திரிந்து வந்த "மஸ்க்" மானினம் கால்பகுதி அளவே இந்தியா, நேபாளம், பூடான், பாகிஸ்தான் பகுதிகளில் மட்டும் எஞ்சியுள்ளது. பேராபத்திற்குள்ள இனமாகி விட்டது. (endangered specise) இம்மானின் சுரப்பியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள் நறுமணம் அளிப்பது மட்டுமின்றி டைபாயிடு, ஆண்மையின்மை. காக்காய்வலிப்பு, நிமோனியா, ஆஸ்துமா, நரம்புத்தளர்ச்சி, ஹிஸ்டீரியா. கபம் போன்ற வியாதிக்கு தலைசிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது. உலகச் சந்தையில் ஜப்பானில் மட்டும் ரூ 5 இலட்சத்திற்கு ஒரு மான் விலை போவதாலும் இந்திய, நேபாள பூடான் அரசுகள் இவ்வாணிபத்தைத் தடை செய்து விட்டமையாலும் கள்ளக்கடத்தல் மூலம் இவ்வியாபாரம் சிறப்பாக நடைபெறுகிறது. 1 கிலோ 'மஸ்க்' திரவம் தயாரிக்க 22 மான்கள் அடித்துக் கொல்லப் படுகின்றன' இந்த வனவிலங்குப்பாதுகாப்புக் கழகச்செயலர் திரு. ஒசாவின் தலையீட்டால் ஜப்பான் அரசும் இவ்வியாபாரத்தை தடைசெய்து விடடபோதும் கடத்தல் ஆசாமிகள் ஜப்பானிய அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்டி விட்டனர். விலங்கினும் கேவலமான கடத்தல் காரர்களுக்கும் ஜப்பான் ஊழல் பெருச்சாளிகட்கும் உள்ள தொடர்பு அறுத்தெறியப் பட்டால் தான் "மஸ்க்" மானினத்தை முற்றிலும் அழிந்து போகாமல் காப்பாற்ற முடியும்.

—"கார்த்திக்"

FREE E- BOOKS , www.thamizham.net.,

# ஆஸ்துமா குணமாக...

இனி கவலையே வேண்டாம். ஆஸ்துமா, ஈஸ்னோபீலியா, தும்மல். இருமல், மூச்சு திணறல் உள்ளவர்கள் விரைவில் நிச்சய நிவாரணம், நிரந்தர சுகமடைய நேரிலும், கடித மூலமும் ஆலோசனை பெறலாம்.

முகவரி : "ஆஸ்துமா ஸ்பெஷலிஸ்ட்"
ஞானோதய வைத்தியர் Dr. C. K. மாணிக்க வாசகம்
செலந்தம்பள்ளி (P.O) திருப்பத்தூர் (T.K) (NA-Dt)635 653

**முகாம் விவரம் [வைத்தியரை நேரில் சந்திக்க]**

**செலந்தம்பள்ளியில் சந்திக்க :**

நாள்: பிரதி வியாழன்—காலை 8மணி முதல் மாலை 4வரை
பஸ்ரூட் : திருப்பத்தூர் (N.A) TO மடவாளம்—8 கி.மீ
மடவாளம் TO செலந்தம்பள்ளி—அரை கி.மீ
திருப்பத்தூர் TO செலந்தம்பள்ளி—8 கி.மீ
[ஆட்டோ, டாக்ஸி வசதியும் உண்டு]

**திருப்பத்தூரில் சந்திக்க :**

நாள் : பிரதி திங்கட்கிழமை—பிற்பகல் 2மணி முதல் மாலை 5 மணி வரை
இடம் : 70-C ஆலங்காயம் ரோட் (மாடியில்)
போன் : 226P.P (கற்பகம் சூப்பர் மார்க்கட் எதிரில்)

**சென்னையில் சந்திக்க :**

நாள் : பிரதி சனி, ஞாயிறு மட்டும்—காலை 8மணி முதல் பகல் 1 மணிவரை
இடம் : மீனாட்சி கல்யாண மண்டபம் (அபிராமி தியேட்டர் அருகில்)
186, புரசைவாக்கம் ஹைரோட் சென்னை-10 போன்-666430

**பெங்களூரில் :**

நாள் : பிரதி மாதம்—முதல் புதன்கிழமை மட்டும்
நேரம் : காலை 9மணி முதல் பகல் 12 மணி வரை
இடம் : ஹோட்டல் பிராட்வே, கெம்பே கவுடா ரோட்,
போன் : 72321.

**கோயமுத்தூரில் சந்திக்க :**

நாள் : பிரதிமாதம்—3 வது புதன்கிழமை
நேரம் . காலை 9 மணி முதல் 12 மணி வரை
இடம் : சேரன் பேலஸ் லாட்ஜ், கோயமுத்தூர்-18
போன் : 30265 AND 36691

FREE E- BOOKS , www.thamizham.net.,

## மாற்று இதயப் பெண் குழந்தை பெற்றாள்.

1980-இல் மாற்று அறுவை சிகிச்சை மூலம் (heart-trans plantation) ஒரு ஆணின் இதயம் பொருத்தப் பெற்ற திருமதி பெட்சி ஸ்நீத் 16-9-84 அன்று சிசேரியன் சிகிச்சை மூலம் பெண் குழந்தைக்குத் தாயானார். கருவுற்றிருக்கும் காலத்தில் பெண்ணின் இதயம் சாதாரணமாகச் செயல்படுவதைவிட 50% அதிக வேகத்தில் இயங்க வேண்டும். ஒரு ஆணின் இதயம் அந்த அளவுக்கு ஈடு கொடுத்து செயல்படுமா என பயந்து முன்பு ஒருமுறை இவருக்கு கரு கலைப்பு செய்து விட்டனர். ஆனால் எப்படியேனும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தே தீருவேன், என மருத்துவ ஆலோசனைக்கு எதிராக முடிவெடுத்து தாயாகவும் ஆகிவிட்டார். ஆனால் பிரசவத்திற்கு முன்னும் பின்னும் பெண்ணின் இதயம் செயல்படும் விதத்தில் மாற்று இதயம் செயல்பட்டு மருத்துவ உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஆனால் மூளையிலுள்ள நரம்புப் பகுதியிலிருந்து இதயப் பகுதிக்குச் செய்தி பரிமாற்றம் சரியாக நடைபெறவில்லை. இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படவில்லை மாற்று இதயம் பொருத்தப் பட்ட பெண் தாயாவது உலகில் இதுவே முதல் முறை.

—"கார்த்திக்"

---

அட்டைப்பட புகைப்படத்தை அட்டிக்கு அனுப்பியவர் : மதுரை. எஸ். மூர்த்தி

---


புத்துலகச் சிந்தனைகளில் பூத்திருக்குமொரு புதுமை நூல்! அனைவரிடமும் இருக்கவேண்டிய அரிய தொகுப்பு!!

ப. மூர்த்தி வழங்கும்

"புரட்சிப் பொன்மொழிகள்"

விலை ரூ 9.50 மட்டுமே.

முன் பணம் அனுப்புவோர்க்கு அஞ்சல் செலவு இலவசம்!

தொடர்புக்கு:
செல்வராசன் பதிப்பகம்,
83, BHASYAM NAGAR, SRI RAM PURAM,
BANGALORE - 560021

FREE E-BOOKS , www.thamizhan.net.,



# புத்தகப் பிழிவு

# தமிழரின் தாயகம்

[புதிய பார்வையுடனும், செய்திகளுடனும் எழுதப்பட்ட நூல்களின் சுருக்கம் இப்பகுதியில் இனி இடம் பெறும்]

ஆசிரியர் : டாக்டர். க. ப. அறவாணன்
கிடைக்குமிடம் : உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113 விலை : ரூ 10/-

● தமிழர் இன ரீதியாகத் தொடர்ந்து வீழ்ந்து கொண்டே வருகின்றமைக்குக் காரணங்கள். (அ) போர்க்குணம் இன்மை (ஆ) தாழ்வு மனப்பான்மை (இ) அயலாரைக் கண் மூடி வரவேற்றுப் போற்றுகின்றமை (ஈ) தொலை நோக்கு இன்மை

● தமிழர் வரலாற்று முற்பட்ட காலத்தில், நடுநிலக் கடல் (தென் ஈரோப்) பகுதியிலிருந்து, கடல் வழி வந்து குடியேறியவர் என்று மேனாட்டார் பலரும் எழுதுவது பொருத்தம் இல்லாதது. தமிழர், பழைய காலத்தில் கடலைக் கண்டு அஞ்சினர், அதனாலேயே கடக்க முடியாதது என்ற பெயரில் 'கடல்' என்ற பெயரையும், கடல் சார்ந்த நிலத்திற்கு சோகத்தைம் உரிப்பொருளாயும், பெற்றிருந்தனர். பாலைப் பிரிவுணர்ந்தும் பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற கடற் பிரிவுப் பாடல்கள் இடம் பெறாமை எண்ணத்தக்கது.

● வடமேற்கு இந்தியாவில் இந்துவெளி நாகரிகத்தைப் படைத்து வாழ்ந்த திராவிடத் தமிழர், ஆரியர் படையெடுப்பால், தெற்கு நோக்கி வந்தனர் என்பதும் ஆராயத் தக்கவே.

● சிந்துவெளி நாகரிகம் அழிந்தது கி.மு. 1500 இல். தமிழர் சிந்துவெளி நாகரிகத்தினர் என்றால், சிந்துவெளி நாகரிக எச்சங்கள் தமிழரிடம் இருக்க வேண்டும் அல்லவா? சிந்துவெளிக் குளியல் அறைகள், தெருவோரச் சாக்கடை

FREE E-BOOKS , www.thamizham.net.,

அமைப்பு பண்டைய தமிழகத்தில் உண்டா? இல்லை. சிந்துவெளியில் புரோகிதனே அரசன் என்றமுறை இருந்தது. தமிழ் நாட்டில் அத்தகுமுறை என்றுமே இல்லை. தமிழகத்தில் சிந்துவெளியை நினைவு கூறும் கட்டடத் தொடர்ச்சியும் இல்லை. எனவே தமிழர், வெளி நாட்டிலிருந்தும் வந்தவர் இல்லை; சிந்துவெள்ளியின்'ன்றும் வந்தவர் இல்லை. அன்னோர் தமிழ் நாட்டையே தம் தாயகமாகக் கொண்டவர்.

● தமிழர் தம் திசைப் பெயர்கள், வடமேற்கு இந்தியாவிற்கோ, நடுநிலக் கடலோரத்திற்கோ, பொருந்தி வரவில்லை. தமிழகத்திற்கு மட்டுமே பொருந்தி வருகின்றன.

● தமிழர்க்கும், குமரி என்ற அழிந்த நிலத்திற்கும் தொடர்புண்டு. தமிழரைப் போன்றே கடல்கோள் கதைகள் அந்தமானில், ஆந்திரத்தில், ஆப்பிரிக்காவில் வழங்குகின்றன. மடகாசுகரின் பழைய பெயரும், மடகாசுகர்க்கும், ஆப்பிரிக்கத் தலை நிலத்திற்கு இடைப்பட்ட கடலின் பெயரும், ஆங்குள்ள தீவுக் கூட்டங்களின் பெயரும் "கொமர்" என்பதாகும். இதனைப் போலவே ஆஸ்திரேலியா, பிஜி, சுமத்ரா, இந்தோ-சீனா, ஆகிய இடங்களிலும், 'குமரி' என்ற பெயரும், 'கடல்கோள்' பற்றிய கதைகளும் வழங்குகின்றன. இது வரை கண்டறியப்படாத, குமரி பற்றிய பல புதிய செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

---

**அவநம்பிக்கை**

கடைகளில்
கண்ணில் படும்படி
சுவரில் பதிந்துள்ள
"கண்ணைப் பார் சிரி"
"கடன் சொல்லாதீர்கள்"
"அரசியல் பேசாதீர்கள்"
என்ற
போர்டின் வாசகங்கள்
மனிதர்களை மதிக்கும்
நம்பிக்கை சின்னங்கள் அல்ல

**இண்டர்வ்யூ**

முட்டாள்கள்
பலர்
ஒன்று கூடி
புத்திசாலி
ஒருவனை
செய்யும்
'ராக்கிங்'!

நவீன
கலாச் சார சின்னங்கள்

—க. க. துறைவன்

FREE E- BOOKS , www.thamizham.net.,



## சிங்கப்பூரில் புகை பிடித்தால்...

சிங்கப்பூரில் பேருந்துகளில் ஓட்டுனரோ, நடத்துனரோ, பயணியோ, எவர் புகை பிடித்தாலும் 500 டாலர்கள் வரை அபராதம் செலுத்த வேண்டும். நோயாளிகள் முன்னிலையில் டாக்டர்களும், மாணவர்கள் எதிரில். ஆசிரியர்களும் புகை பிடிப்பது தடைசெய்யப் பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்கள் புகை பிடித்தால் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள். டாக்ஸி டிரைவர்கள் பயணிகளை ஏற்றிச் செல்லும் பொழுது புகைத்தால், 400 டாலர்கள் வரை அபராதம் கட்ட வேண்டும். அரசு ஊழியர்களும் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் வேளைகளில், புகை பிடிக்கக் கூடாது என்று தனித்தனியே எச்சரிக்கப்பட்டுள்ளனர். சினிமா, நாட்டியம், நாடக அரங்குகளில் புகை பிடித்தால் 500 டாலர்கள் வரை அபராதம் வசூலிக்கப்படும்.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்


### சு. சமுத்திரத்தின்

### சமூகப்பார்வைமிக்க நூல்கள்

| | |
|---|---|
| சமுத்திரம் கதைகள் | 7-25 |
| இல்லந்தோறும் இதயங்கள் | 12-00 |
| காகித உறவு | 5-75 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| வேரில் பழுத்த பலா | 12-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 6-50 |
| நெருப்புத் தடயங்கள் | 18-00 |
| புதிய திரிபுரங்கள் | 8-25 |
| ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது) | 9.00 |

### மணிவாசகர் நூலகம்

புத்தகம் வெளியிடுவோர், 89, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.
போன் : 512996



FREE E- BOOKS , www.thamizham.net.,

பாலசந்தர் படவுலகில் பிரவேசித்தபோது அதன் பிரதான பிடிப்பு மூவேந்தர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. திரையுலகிற்கு உள்ளேயும் சரி—வெளியேயும் சரி இந்த ஆளுகை ஒன்றோடொன்று பின்னிக் கிடந்தது. இதையே வேறுவிதமாகச் சொன்னால் திரையின் தயாரிப்பாளர்கள் முதல் விநியோகிஸ்தர்கள் உட்பட ரசிகர்கள் வரை இவர்களது செல்வாக்கு அடியாழத்திற்கு ஊடுருவி இருந்தது. ஆரம்ப காலத்தில் செல்வாக்கானது பிற்காலத்தில் பெரும் செல்வாக்காக மாறியது. இதன் விளைவாக ரசிகர்களுக்கும் ரசனைகளுக்கும் ஏற்ற கலைஞர்கள் என்ற நிலைமாறி கலைஞர்களுக்கேற்ற கதை-காட்சிகளுக்கேற்ற ரசிகர்கள் என்ற நிலை உருவாயிற்று. இத்தகைய போக்கிற்கு ரசிகர்கள் பழக்கப் படுத்தப்பட்டார்கள்.

சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர், ஜெமினி கணேசன் ஆகிய இந்த முக்கோணமும் திரையுலகின் தலைவிதியை நிர்ணயித்தது. ரசிகர்களும் இதற்கேற்ப பிரிந்திருந்தார்கள். பாசம் நிறைந்த அண்ணன் கடமை தவறாத தந்தை, உயிருக்குயிரான நண்பன் போன்ற பாத்திரங்களில் செண்டிமெண்டலாக சிவாஜி கணேசன், அநீதியை எதிர்த்து நிற்பது தீயவர்களை அம்பலப்படுத்துவது, நல்லவர்களுக்காக சண்டை போடுவது, கெட்டவர்களை ஒழித்துக் கட்டுவது போன்ற அறநெறிப் பணிகளில் எம். ஜி. யாரும் நடித்தார்கள். காதல், இளைஞனின் மென்மையான உணர்வுகள் போன்ற நளினமான குணவியப்புகளை ஜெமினி கணேசன் பிரதிபலித்து வந்தார்.

இவர்களில் ஜெமினிகணேசனுக்கு தனிப்பட்ட ரசிகர் கூட்டம் என்பது கிடையாது. இவர்கள் பெரும்பாலானோர் இளைஞர்கள். அதிலும் காதல் வயப்பட்ட கனவு காணும் கல்லூரி மாணவர்கள். நடுத்தர வர்க்கத்தினரும் கொஞ்சம் உண்டு. ஜெமினியின் படம் என்பதற்காக முண்டியடித்துப் பார்க்கிற வழக்கம் கொண்ட ஏழை எளிய மக்கள் கூட்டம்





FREE E- BOOKS , www.thamizham.net.,

கிடையாது. எனவே எம்.ஜீ. யாரும் சிவாஜியும் இவர்களை பங்கிட்டுக் கொண்டார்கள். இதற்கு இரு வேறு காரணங்களும் உண்டு. ஒன்று—இவர்களது அரசியல் சார்பு. 2. தொழில் ரீதியான பிடிப்பு. எம்.ஜீ. ஆர் தி.மு.கவையும், சிவாஜி கணேசன் காங்கிரஸ் கட்சியையும் சார்ந்து நின்றார்கள். இவர்களால் சம்பந்தப்பட்ட கட்சிகள் வளர்ந்தன என்பதைவிட—அவைகளால் இவர்கள் வளர்ந்தார்கள் என்பதே உண்மை. இக்கட்சிகளின் பின்னணியில் ரசிகர் மன்றங்கள் உருவாகி ஸ்தாபன ரீதியான செல்வாக்கையும், ஒன்று திரட்டப்பட்ட பலத்தையும் ஏற்படுத்தித் தந்தன. நடிப்போடு மட்டும் நில்லாமல் இவர்கள் சொந்தமாக படங்களைத் தயாரிக்கவும், விநியோகிக்கவும், திரையிடவும் துவங்கினார்கள். தானே தயாரித்து, தானே நடித்து, தானே விநியோகித்து, தனது தியேட்டரில் தானே திரையிட்டுக் கொள்ளக்கூடிய வசதியும் வாய்ப்பும் பெற்றதால் தொழில் ரீதியாகவும் இவர்கள் தவிர்க்க முடியாதவர்களானார்கள். ஆக-உற்பத்தித்துறை-வினியோகத்துறை அரசியல் துறை-இறுதியாக ரசிகர் மன்றம் போன்றவைகளில் இவர்களது பிடிப்பு பலமடைந்தது. எனவே இவர்களைத் தாண்டி எந்த கதை வசனக்கர்த்தாவாலும் இயக்குனராலும் செல்ல முடியவில்லை. இவர்களை வளர்த்து விட்ட பீம்சிங், கிருஷ்ணன், பஞ்சு, நீலகண்டன் போன்ற இயக்குனர்கள் கூட இறுதிக்கட்டத்தில் இரண்டாம் பட்சமாக மாறினார்கள்.

மூவேந்தர்களின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்தகாலத்தில் அவர்களைச் சுற்றி அரண்களை அமைத்த பெருமை ஸ்ரீதரையும் கோபால கிருஷ்ணனையும் சாரும். இவர்களால் இந்த வல்லரசர்களை ஒதுக்கவோ-புறக்கணிக்கவோ முடியவில்லை. தரமாகவும், வித்தியாசமாகவும், யதார்த்த வாழ்க்கையை ஒட்டியும் இவர்கள் சிலவற்றை படைக்கத் துவங்கினார்கள். ஆயினும் புத்தம் புதிய கலைஞர்களைப் பயன்படுத்தி இவர்களால் பலப்பரிட்சையை நடத்த முடியவில்லை. ஏற்கனவே விளம்பரமான பெரிய கலைஞர்களை வைத்து தமது புதுமைகளைப் புகுத்தினார்கள்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

## மலையாள இலக்கிய வாதிகள் நம் இலக்கியங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

மலையாளத்தில் பிரபல பத்திரிகைகளிலும் எல்லாவித சோதனைகளுக்கும் இடம் தருகிறார்கள். நம்மவர்கள் ஒரு வேளை பிரபலமானவர்களுக்கு இடம் தந்தாலும் புதியவர்களுக்கு அதிகமாய் வாய்ப்புக்கள் தருவதில்லை எனவே மலையாள இலக்கியவாதிகள் நம் இலக்கியம் ஒரு மந்தநிலையில் கட்டுப்பெட்டித் தனத்துடன் இயங்குவதாய் குற்றம் சாட்டுகிறார்கள் —

இப்படிச் சொல்கிறார், தமிழிலும் மலையாளத்திலும் எழுதி வரும் நாவலாசிரியர் திரு. நீல பத்மநாபன் அவர்கள், 1973-76இல் தமிழில் வெளிவந்த மிகச் சிறந்த படைப்பிலக்கியத்திற்கான பரிசு இவரது "உறவுகள்" நாவலுக்கு வழங்கப்பட்டது. 3 மாணவர்கள் இவரது படைப்புகளை பி. எச்டி பட்டத்திற்கு ஆய்கிறார்கள். சுட்டிக்கு இவர் அளித்த சிறப்புப் பேட்டி அடுத்த இதழில் இடம் பெறுகிறது.

---

படவுலகில் பாலசந்தர் கூட ஆரம்பத்தில் தனது முழுத் திறமையையும் பயன்படுத்தவில்லை. தெய்வத்தாய், நீலவானம், பூஜைக்கு வந்த மலர் ஆகிய மூன்று படங்களுக்கு இவர் கதை அல்லது வசனம் எழுதினார். இந்த மூன்றும் மூவேந்தர்களின் படமே. எனவே இவை வழக்கமான பார்முலாப் படங்கள் தான். தனது தனித்துவத்தையும் சோதனையையும் நாடக மேடையில் தான் பாலசந்தர் பயன்படுத்தி வந்தார்.

சர்வர்சுந்தரம், நீர்க்குமிழி, எதிர்நீச்சல், மேஜர் சந்திரகாந்த் போன்ற நாடகங்கள் அமோகமான வரவேற்பை பெற்று நாடக ரசிகர்களிடையே புதிய 'தாகத்தைப் பெற்ற போது அவை திரை வடிவம் பெறத் துவங்கின.

புராண நாடகங்களோ-அல்லது வெறும் துணுக்குத் தோரணங்களைக் கொண்ட நகைச் சுவை நாடகங்களோ இல்லாமல் மையப் பிரச்சனையை வைத்து பல்வேறு உத்திகளுடன் விறுவிறுப்பாக ஆக்கப்பட்ட இந்த நாடகங்கள்

FREE E- BOOKS , www.thamizham.net.,

பெரும்பாலும் பெருநகரங்களின் நடுத்தர வர்க்கத்தாலேயே ரசிக்கப்பட்டன. எனவே இவை திரை வடிவம் பெற்ற போது அங்கேயும் இவருக்கு நடுத்தர வர்க்க ரசிகர்களே கிடைத்தார்கள். இது எம். ஜி. ஆர் சிவாஜியளவிற்கு விஸ்தாரமாக இல்லையென்றாலும் சிந்தனா பூர்வமாக ரசிக்கக் கூடிய-தரமான விஷயங்களை தரிசிக்கக் கூடிய-வித்தியாசமான முறையில் அணுகக் கூடிய-ஒரு புதிய பகுதியினர் திரை ரசிகர்களில் உருவானார்கள். எனவே திரைப்படம் என்றால் வாயாரச் சிரித்துவிட்டு, மனசார அழுதுவிட்டு வருவது என்றல்லாமல் நாம் சந்திக்கிற பிரச்சனைகளை அதன் காரணிகளை பின்னணிகளைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு சாதனம் என்ற நம்பிக்கையை இந்த நடுத்தர வர்க்கம் பெற்றது. இன்னும் சரியாகச் சொன்னால் ஒரு கருத்தரங்கத்திற்குப் போகிற மாதிரி-பட்டி மன்றத்திற்குப் போகிற மாதிரி-பாலசந்தர் படத்திற்கு போகிற பழக்கம் உருவாயிற்று. குடும்பப் பாங்கான உணர்ச்சிப் பிரளயங்களோ, காதல் ரஸங்களோ, கதாநாயக சாகஸங்களோ சண்டைகளோ இல்லாமல் மனப் போராட்டங்கள் தர்ம சங்கடமான நெருக்கடிகள்-விவாதங்கள் போன்றவை பிரதான இடம் பெற்றன. அண்ணனாக, தம்பியாக, தந்தையாக என்றல்லாமல் பலமும், பலவீனமும் கொண்ட

நன்மையும், தீமையும் கொண்ட, கோழைத்தனமோ-வீரமோ கொண்ட-தனிப்பட்ட ஆளுமையைப் படைத்த பாத்திரங்கள் படவுலகில் பாலசந்தரால் வார்ப்பிக்கப்பட்டன. விடுதலைக்கு முன்பும் அதை ஒட்டியும் இத்தகைய பாத்திர வார்ப்புகள் என்பது உண்மையாக தான் இருந்தன. ஆனால் அதற்குப் பிறகு மிகப் பெரிய இடைவெளி தோன்றியது. இந்த இடைவெளியை நிரப்ப ஸ்ரீதர், கோபாலகிருஷ்ணன், பாலசந்தர் ஆகியோா முயன்றனர். பாலசந்தர் படங்களில் இந்த முயற்சி முழுவடிவம் பெற்று போதிய வெற்றியையும் பெறத் துவங்கியது.

ஆயினும் இதே காலத்தில் தமிழகத்திற்கு அப்பால் திரையுலகம் எவ்வளவோ புதுமையாகவும், புரட்சிகரமாகவும் முன்னேறிக் கொண்டிருந்தது. —டி. எஸ். ரவீந்திரதாஸ்

(தொடரும்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஓவியக் கவிஞர்

அமுதபாரதியின் (அமுதோன்)



தமிழில் முதன் முதலாக
வெளிவரும் 'ஹைக்கூ'
கவிதைகளின் தொகுப்பு
விலை ரூ. 7

நர்மதா பதிப்பகம்
தி. நகர், சென்னை-600 017
Phone : 444 237

எந்த ஐயத்திற்கும் பதில்-2 ரூபாயில்!

'யாரிடம் கேட்பேன்? எங்கு போய்த் தேடுவேன்?' என்று குழம்பித் தவிக்கும் நிலை இனி யாருக்கும் வேண்டாம். மனித அறிவுக்கு எட்டிய அத்தனை துறைகளுக்கும் கூட்டு பதிலாளர் குழு நிபுணர்களைக் கொண்டு பதில் அளிக்க முயல்கிறது.

இதுபோன்ற கேள்விகளா? அல்லது வேறு மாதிரியா?
கேளுங்கள்

✳ புதிதாக சிறுதொழில் தொடங்க யாரை எப்படி அணுகுவது என வழி காட்டுக

✳ "தலிச்சுற்றுக்கு மட்டும்" என்றுப் போட்டுப் பத்திரிகை நடத்துவது சட்டப்படி சரியா?

✳ 10 ஆண்டுகளாக குழந்தைப் பேறின்றி பரிதவிக்கும் எனக்கு விமோசனம் பிறக்குமா?

✳ விட்டுக்காரன் வீட்டை காலி செய்யச் சொல்லி அநியாய வழிகளில் மிரட்டுகிறான். சட்டம் எனக்கு உதவுமா?

✳ உலகில் கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சி நடக்கும் நாடுகள் எத்தனை?

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 விதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள். பதில்களைத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம். எழுதுக: கூட்டு பதிலாளர் குழு, 1494 அண்ணாநகர், சென்னை-600040

FREE E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே!

கட்டிக்குப் படைப்புகள் அனுப்பும் வாசக அன்பர்களுக்கு ஒரு விஷயத்தைப் புரிய வைக்க வேண்டியிருக்கிறது. கட்டி மாதிரி நிறைய பத்திரிகைகள் இல்லாததால், முற்போக்கு எண்ணங்கொண்ட இளைய வாசகர்கள் நூற்றுககணக்கில் தங்கள் படைப்புகளை மாதந் தோறும் எங்களுக்கு அனுப்புகிறார்கள். சிறப்பாக கவிதைகள் மலைமலையாக வருகின்றன எல்லாவற்றையும் ஒரிதழில் வெளியிட வேண்டுமாயின் கட்டியின் பக்கங்கள் பல நூறாக இருக்க வேண்டும். இது சாத்தியமா? அனுப்புவோர் அனைவரின் படைப்புகளும் நிச்சயம் படிக்கப்படுகின்றன. ஆனால் ஒரிதழிற்குத் தேர்ந்தெடுக்கக் கூடியவை, மிகச் சிறப்பானவை மட்டுமே அச்சேறுகின்றன. எந்த பாரபட்சமுமின்றி அவை தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு படைப்பாளனின் படைப்பும், அவரைப் பொறுத்தவரை மிகச் சிறந்தவை-தனது குழந்தைகள் மாதிரி! அந்தப் பார்வையில், அவரது படைப்பு கட்டியில் இடம் பெறாதபோது அவருக்கு ஆத்திரமும், எரிச்சலும் கட்டி மேல் எழுவது எங்களால் புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால் ஒரு சில படைப்பாளர்களைத் திருப்திப் படுத்துவதை விட, ஆயிரக் கணக்கான கட்டி வாசகர்களுக்கு மிகச் சிறந்ததைத் தர வேண்டிய பொறுப்பு ஆசிரியர் குழுவிற்கு இருக்கிறது என்பதையும் நண்பர்கள், கொஞ்சம் நியாயமாக உணர்ந்து பார்க்க வேண்டுகிறோம். தயவு செய்து ஒரு பிரதி எடுத்துக் கொண்டு அனுப்புங்கள். வெளியிட்டால் மட்டும் உங்களுக்குத் தகவல் வரும். வெளியிடாதவற்றையெல்லாம் திரும்பியனுப்பவும், அது தொடர்பாக கடிதத் தொடர்பு கொள்ளவும் முழு நேரப்பணியாளர்கள் சிலர் தேவை. அந்த வசதி கட்டிக்கு இப்போது இல்லை என்பதையும் கொஞ்சம் அனுதாபத்தோடு புரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

" [illegible]
"


— [illegible]

ஒரு வாசகரின் குமுறல் இது: அவர் மன உணர்வை வெளிப்படுத்தியமைக்கு நன்றி. இது போன்று மௌனமாக குமுறுவோர்க்கெல்லாம் இந்தக் கடிதம் சரியான பதிலாக இருக்குமென நம்புகிறோம். மீற உங்களிடமிருந்து

அன்புடன்,

—ஆசிரியர் குழு

FREE E- BOOKS , www.thamizham.net.,





FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

[illegible] [illegible] 1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-58

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)

# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,